# இந்திய உச்ச நீதிமன்றம்

## சமாதான் சாமரோஹ், 2026

### (இந்திய உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு மக்கள் நீதிமன்றம்)

சிறப்பு மக்கள் நீதிமன்றம் பங்கேற்பு நீதி மற்றும் நீதியை மக்களின் இருப்பிடத்திற்கே கொண்டு சேர்த்தல் ஆகிய தொலைநோக்குப் பார்வைகளை முன்னெடுக்கும் வகையில், மத்தியஸ்தம் மூலம் தீர்வு காணுதல் மற்றும் தகராறுகளை இணக்கமாகத் தீர்த்தலுக்காக, இந்திய உச்ச நீதிமன்ற நடவடிக்கை அதாவது சமாதான் சாமரோஹ் எனும் நிகழ்வு நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றம் 2026 ஏப்ரல் 21 அன்று தொடங்கி ஆகஸ்ட் 21, 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் நிறைவடைகிறது.

இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றம் பரஸ்பர ஒப்புதலின் அடிப்படையிலான தீர்வு வழிமுறைகள் மூலம், இந்திய உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு இணக்கமான தீர்வை காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**<u>பங்கேற்பதற்கான அழைப்பு</u>**

அனைத்து வழக்கறிஞர்கள், வழக்காடிகள் மற்றும் வழக்கு தொடர்புடைய அனைத்து தரப்பினர்களும் இந்த முன்னெடுப்பின் கீழ் தகராறுகளை திறம்படத் தீர்ப்பதில் தீவிரமாக பங்கேற்று பங்களிப்பை நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வழக்கு தரப்பினர்கள் நேரடியாகவோ அல்லது இணையதள வசதியான காணொலி மூலமாகவோ, ஆஜராகி தங்களது பிரச்சனைகளை சமரசமாக தீர்த்துக் கொள்ளலாம்.

**<u>எவ்வாறு விண்ணப்பிக்கலாம்</u>**

சம்பந்தப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களது வழக்கறிஞர்கள் கீழ்காணும் இணைப்பில் உள்ள கூகுள் படிவத்தை பூர்த்தி செய்து தங்களது கோரிக்கையை சமர்ப்பிக்கலாம்.

Google Form Link: https://forms.gle/jqxefqF4BCWzukoP6

This Google Form is also available at https://www.sci.gov.in/

**<u>கூகுள் படிவத்தை நிரப்புவதற்கான கடைசி நாள்: 31.07.2026</u>**

எந்தவொரு உதவி அல்லது தகவலுக்கு தொடர்பு கொள்ள

**சமாதான் சாமரோஹ் (சிறப்பு மக்கள் நீதிமன்றம்)**

**ஒருங்கிணைந்த சேவை மையம் பொறுப்பாளர் தொடர்பு எண் 011–23112428, 011–23112528 ஒருங்கிணைந்த சேவை மையம் (அறை எண்.806 மற்றும் 808, பி பிளாக், கூடுதல் கட்டிட வளாகம், இந்திய உச்ச நீதிமன்றம்) தொலைபேசி எண் 011–23116464 இயக்குனர் CRP அவர்களின் தொர்பு எண் 011–23115652 மின் அஞ்சல் முகவரி speciallokadalat2026@sci.nic.in**

இந்திய உச்சநீதிமன்றத்தால் பொதுநலன் கருதி வெளியிடப்படுகிறது.